# இந்து மூலங்கள் வலியுறுத்தாத சதிவழக்கும் (உடன்கட்டை ஏறுதல்) அது பற்றிய மக்களின் புரிதலும்: விமர்சன நோக்கு

**என்.சுபராஜ்[1],எஸ்.கேசவன்[2]**
[1இ]மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
[2]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
*[1]subaraj84@yahoo.com, [2]manonmanys@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்:** சதிவழக்கு என்பது கணவன் இறந்ததும் மனைவி உயிர்வாழ விரும்பாது கணவனுடன் இறந்து போவதைக் குறிக்கின்றது. இறைவனால் ஜனனம் (பிறப்பு) ஏற்படுத்தப்படுவது போல் மரணமும் தக்க காலத்திலேயே இடம் பெறல் வேண்டும். மரணம் மனிதர்களால் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்றாக இருக்கும் போது அது தீமையான விளைவுகளை தருகின்றது. அத்தகைய விளைவுகளையே சதி வழக்கும் தருகின்றது. சதி வழமை என்பது பதியோடு சேர்ந்து பத்தினியையும் உயிரோடேயே தஹனம் செய்யும் வழமையாகும். ஸதி, ஸஹகமனம், உடன் கட்டையேறுதல் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது. இந்து மதம் இதனை வலியுறுத்தாத போதிலும் இவ்வழமை இந்துக்கள் மத்தியில் நீண்ட காலமாக இந்தியாவில் சில பிரதேசங்களில் இருந்து வந்தது. உடன்கட்டை ஏறிய பெரும்பாலான பெண்கள் இதனை முழுமனதோடு விரும்பியே மேற்கொண்டுள்ளனர். உடன்கட்டை ஏறுவது சமூகத்தில் விரும்பப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. இந்துக்களைப் பொறுத்தவரையில் இவ்வழமை இந்தியாவில் குறிப்பாக வடஇந்தியாவின் ஒரு சில இடங்களிலேயே இருந்துள்ளது என்பதை புள்ளிவிபரத் தரவுகள் கூறுகின்றன. அதேவேளை இந்துமத மூல இலக்கியங்கள் எவற்றிலும் உடன்கட்டை ஏறுதல் அவசியமானதொன்று என்னும் நியமங்கள் விதிக்கப்படவில்லை. அவ்வாறு இருந்தும் இந்துசமூகத்தில் இவ்வழமை வந்து புகுந்துள்ளது என்பதும் இவ்வழமை ஒரு சில இடங்களில் நடந்த போதிலும் ஒட்டுமொத்த இந்து சமூகத்தினராலும் இது நிகழ்த்தப்படுவதாக பறைசாற்றப்படுகின்றது என்பதும் இவ்வாய்வின் பிரச்சினைகளாகும். இந்து மூலங்கள் எவற்றிலும் உடன்கட்டை ஏறுதல் வலியுறுத்தப்படவில்லை, பிரித்தானிய அரசின் திட்டமிடப்பட்ட செயலே இப்பிரச்சினை பூதாகரமாக வெளிப்பட்டது என்பதனை எடுத்துக்காட்டுதலுமே இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வுக்கு வரலாற்றியல் ஆய்வும், விமர்சன ரீதியான ஆய்வும் பயன்படுத்தப்படுகின்றன. உடன்கட்டை ஏறுதல் தொடர்பான உண்மைகளை வரலாற்று அடிப்படையில் அணுகுவதாலும் உடன்கட்டை ஏறுதலை விமர்சன ரீதியில் நோக்குவதாலும் முறையே இவ்வாய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் பிரதான நோக்கங்களை நிறுவுவதற்கு இரண்டாம் நிலைத்தரவுகளே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. உடன்கட்டையேறுதல் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இணையத்தளச் செய்திகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைகின்றன. முடிவாக, உடன்கட்டை ஏறல் என்பது இந்துசமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது. ஆனால் தம் பதி மீது கொண்ட அன்பும், கைம்மை நோன்பின் (விதவையருக்கான நியம வாழ்வு) கொடுமையுமே பெண்களை உடன்கட்டை ஏறச் செய்தன. ஆனால் காலணித்துவ ஆட்சியில் ஆங்கிலேயர்கள் இவ்வழமையை பூதாகரமாக வெளிப்படுத்தியமையே ஒட்டுமொத்த இந்துசமூகத்திற்கும் இவ்வவப் பெயர் உருவாக காரணமாக அமைந்தது.

**திறவுச் சொற்கள்:** சதிவழக்கு, மரணம், பதிவிரதை, கைம்மை நோன்பு, ஆங்கிலேயர்

## ஆய்வு அறிமுகம்

சதி வழமை என்பது பதியோடு சேர்ந்து பத்தினியையும் உயிரோடேயே தஹனம் செய்யும் வழமையாகும். ஸதி, ஸஹகமனம், உடன் கட்டையேறுதல் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது.சதிவழக்கு என்பது கணவன் இறந்ததும் மனைவி உயிர்வாழ விரும்பாது கணவனுடன் இறந்து போவதைக் குறிக்கின்றது. இறைவனால் ஜனனம் (பிறப்பு) ஏற்படுத்தப்படுவது போல் மரணமும் தக்க காலத்திலேயே இடம் பெறல் வேண்டும். மரணம் மனிதர்களால் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்றாக இருக்கும் போது அது தீமையான விளைவுகளை தருகின்றது. அத்தகைய விளைவுகளையே சதி வழக்கும் தருகின்றது.இவ்வழமை இந்துக்கள் மத்தியில் நீண்ட காலமாக இருந்து வந்தது. உடன்கட்டை ஏறினால் உயிருடன் உள்ள பெண் எரியும் போது, அந்தப் பெண் அடையும் துன்பம் விபரிக்கவியலா. ஒரு உயிர் போகும் போது எதற்காக இன்னொரு உயிர் சேர்ந்து செல்ல வேண்டும். இறந்தவருக்கு கூட இந்த கொடூர துன்பம் உண்டாகவில்லையே? என்கின்ற வினாக்கள் உடன்கட்டை ஏறுதலை எதிர்க்கும் வகுப்பினரால் எழுப்பப்படும் வினாக்களாகும். ஆனால் உடன்கட்டை ஏறிய பெரும்பாலான பெண்கள் இதனை முழுமனதோடு விரும்பியே மேற்கொண்டுள்ளனர்.உடன்கட்டை ஏறுவது சமூகத்தில் விரும்பப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை என்பதும் கணவன் மீது அதிக அன்பு கொண்டிருந்ததால் உடன் உயிர் துறந்துள்ளனர் என்பதும் இது கட்டாயமான ஒரு நியமமாக இருக்கவில்லை என்பதும் வெளிப்படுகின்றன. உடன்கட்டை ஏறல் என்பது இந்துசமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது. ஆனால் தம் பதி மீது கொண்ட அன்பும், கைம்மை நோன்பின் (விதவையருக்கான நியம வாழ்வு) கொடுமையுமே பெண்களை உடன்கட்டை ஏறச் செய்தன. ஆனால் காலணித்துவ ஆட்சியில் ஆங்கிலேயர்கள் இவ்வழமையை

பூதாகரமாக வெளிப்படுத்தியமையே ஒட்டுமொத்த இந்துசமூகத்திற்கும் இக்கெட்ட பெயர் உருவாக காரணமாக அமைந்தது.

**ஆய்வுப் பிரச்சினை**

இந்துக்களைப் பொறுத்தவரையில் இவ்வழமை இந்தியாவில் குறிப்பாக வடஇந்தியாவின் ஒரு சில இடங்களிலேயே இருந்துள்ளது என்பதை புள்ளிவிபரத் தரவுகள் கூறுகின்றன. அதேவேளை இந்துமத மூல இலக்கியங்கள் எவற்றிலும் உடன்கட்டை ஏறுதல் அவசியமானதொன்று என்னும் நியமங்கள் விதிக்கப்படவில்லை. அவ்வாறு இருந்தும் இந்துசமூகத்தில் இவ்வழமை வந்து புகுந்துள்ளது என்பதும் இவ்வழமை ஒரு சில இடங்களில் நடந்த போதிலும் ஒட்டுமொத்த இந்து சமூகத்தினராலும் இது நிகழ்த்தப்படுவதாக பறைசாற்றப்படுகின்றது என்பதும் இவ்வாய்வின் பிரச்சினைகளாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

இந்து மூலங்கள் எவற்றிலும் உடன்கட்டை ஏறுதல் வலியுறுத்தப்படவில்லை, பிரித்தானிய அரசின் திட்டமிடப்பட்ட செயலே இப்பிரச்சினை பூதாகரமாக வெளிப்பட்டது என்பதனை எடுத்துக்காட்டுதலுமே இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வுக்கு வரலாற்றியல் ஆய்வும், விமர்சன ரீதியான ஆய்வும் பயன்படுத்தப்படுகின்றன. உடன்கட்டை ஏறுதல் தொடர்பான உண்மைகளை வரலாற்று அடிப்படையில் அணுகுவதாலும் உடன்கட்டை ஏறுதலை விமர்சன ரீதியில் நோக்குவதாலும் முறையே இவ்வாய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் பிரதான நோக்கங்களை நிறுவுவதற்கு இரண்டாம் நிலைத்தரவுகளே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. உடன்கட்டையேறுதல் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இணையத்தளச் செய்திகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைகின்றன. இவை பண்புசார் மற்றும் அளவுசார் தரவுகளாக அமைகின்றன.

**ஆய்வின் மையம் (தரவுப் பகுப்பாய்வு)**

**சதிவழக்கு**

இறைவனால் ஜனனம் (பிறப்பு) ஏற்படுத்தப்படுவது போல் மரணமும் தக்க காலத்திலேயே இடம் பெறல் வேண்டும். மரணம் மனிதர்களால் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்றாக இருக்கும் போது அது தீமையான விளைவுகளை தருகின்றது. அத்தகைய விளைவுகளையே சதி வழக்கும் தருகின்றது. சதி வழமை என்பது பதியோடு சேர்ந்து பத்தினியையும் உயிரோடேயே தஹனம் செய்யும் வழமையாகும். ஸதி, ஸஹகமனம், உடன் கட்டையேறுதல் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது.

**இந்து மூல இலக்கியங்கள் ஏற்காத சதிவழக்கு**

உடன்கட்டை ஏறும் வழமை இந்துமக்கள் மத்தியில் ஏற்பட்டமைக்கான இந்துமத மூல இலக்கியங்கள் உடன்கட்டை ஏறுதல் பற்றிக் கூறியிருக்கின்றன என்பது சிலரது வாதமாக இருக்கின்றது. ஆனால் இந்துமத மூல இலக்கியங்களில் கணவன் இறந்தால் பெண்கள் உடன்கட்டை ஏறுதல் வேண்டும் என்கின்ற எந்த நியமங்களையும் முன்வைக்கவில்லை. அதற்கான ஆரம்ப அறிவுறுத்தல்களைக் கூட வலியுறுத்தவில்லை. உண்மையில் இம்மூலங்களில் உடன்கட்டை ஏறும் பெண்களை தடுத்து நிறுத்தியமைக்கான குறிப்புக்களே உள்ளன.

இந்துக்களின் மூல நூல்களில் முதன்மையான வேத இலக்கியத்தில் கணவனின் சிதையில் ஏறிய பெண்ணை கீழே இறக்கும் வகையில் பெரியோர்கள் வேண்டிக் கொள்கின்றார்கள்.**(ரிக்வேதம்:10:4:2)** இதன் மூலம் வேதகால மக்கள் மத்தியில் இவ்வழமை சிலரிடம் இருந்திருக்கின்றது எனக் கொள்ளமுடியுமே தவிர இந்துமதம் உடன்கட்டை ஏறுதலை ஏற்றுக்கொள்கின்றது அல்லது வலியுறுத்துகின்றது எனக் கூறுதல் பொருத்தமற்றதாகும். இந்தகைய தவறான கருத்தியல்களே பிற்காலத்தில் சமூகத்தில் உடன்கட்டையேறல் வழமை வளர்ச்சியடைவதற்கு காரணங்களாக அமைந்தன.

அன்றைய இந்து சமுதாயத்தில் கற்பிலே உச்ச நிலையில் இருக்கிற, அதனை தம் உயிரை விட மேலாக நினைக்கின்ற ஸ்திரீகள் தான் உடன்கட்டை ஏறினார்களே தவிர, பிறர் வலுக்கட்டாயப்படுத்தி ஸ்திரீகளைப் புருஷர்களோடு போட்டுக் கொளுத்தி விடவில்லை. வலுக்கட்டாயம் செய்யாததோடு இஷ்டப்பட்டு ஸஹகமனம் செய்யப் போனவர்களைத் தடுத்துக்கூட இருக்கிறார்கள். பாண்டுவின் இரண்டு பத்னிகளில் மாத்ரி தன்னோடு பாண்டு சேர்ந்ததால்தானே பூர்வ சாபப்படி சாகும்படி ஆயிற்று என்று

வேதனைப்பட்டு பிராயச்சித்தமாக உடன்கட்டை ஏறினாள். இதை அநுமதித்த பெரியவர்களே குந்தியும் உடன்கட்டை ஏறப்போனபோது, ”கூடாது, கூடாது. நீ உயிரை வைத்துக் கொண்டு இந்த ஐந்து குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்குவதுதான் முறை” என்று தடுக்கின்றாள் என மகாரதம் உரைக்கின்றது. **(மகாபாரதம்,ஆதிபர்வம்)**

**தமிழர்களும் ஏற்காத உடன்கட்டை வழமை**

பண்டைய தமிழக சங்க இலக்கியச் செய்யுள் ஒன்றிலும் கணவனின் சிதையில் ஏற முயன்ற பெண்னை கீழே இறக்கும் வகையில் வழங்கப்பட்ட அறிவுரைகள் காணப்படுகின்றன.

‘‘பல் சான்றீரே! பல் சான்றீரே!
“செல்க“ எனச் சொல்லாது, “ஒழிக“ என விலக்கும்,
பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!
அணில் வரிக் கொடுங் காய் வாள் போழ்ந்திட்ட
காழ் போல் நல் விளர் நறு நெய் தீண்டாது,
அடை இடைக் கிடந்த கை பிழி பிண்டம்,
வெள் எள் சாந்தொடு, புளிப் பெய்து அட்ட
வேளை வெந்தை, வல்சி ஆக,
பரல் பெய் பள்ளிப் பாய் இன்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ்
பெருங் காட்டுப் பண்ணிய கருங் கோட்டு ஈமம்
நுமக்கு அரிதாகுக தில்ல எமக்கு எம்
பெருந் தோள் கணவன் மாய்ந்தென, அரும்பு அற
வள் இதழ் அவிழ்ந்த தாமரை
நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே!’’**(புறம்: 246)**

திணை: பொதுவியல் (பொதுவியல் திணை என்பது வெட்சி முதல் பாடாண் வரையிலான ஒன்பது திணைகளில் அடக்கிக் கூறமுடியாத பொதுவான செய்திகளைக் கூறும் திணை)
துறை: ஆனந்தப்பையுள் (கணவன் இறப்ப மனைவி மெலிந்து வருந்தும் அறத்துறை)

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்ற பாண்டிய அரசனின் அரசி பெருங்கோப்பெண்டு என்பவர் பாடியது. பூதப்பாண்டியன் இளம்வயதிலேயே மாண்டுவிட கணவனை இழந்து வாழேன் என்று கூறி உடன்கட்டை ஏற முடிவெடுத்தாள் பெருங்கோப்பெண்டு. அமைச்சர்களும் அரசவைப் பெரியோர்களும் அவளது முடிவை மாற்றிக் கொள்ள வற்புறுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் வேண்டுகோளை மறுத்து அரசி இயற்றிய பாடல் இது. இந்தச் செய்யுள் கூறுகின்ற செய்திகள்:

1. சான்றோர்களே! சான்றோர்களே! நீயும் இறந்துபட்ட கணவனுடன் சென்று விடு என்று என்னை அனுப்பாமல் அதனைத் தவிர்த்து உயிர் வாழச் சொல்லும் உங்கள் பொல்லாத பேரறிவினை உடையவராக இருக்கிறீர்களே.
2. அணிலின் முதுகில் உள்ள கோடுகளைப் போன்ற வரிகளை உடைய வெள்ளரிக்காயைப் பிளந்தால் அதிலிருக்கும் சிறு விதைகளைப் பார்க்கலாம் அந்த விதைகளைப் போன்ற நுண்ணிய நெய்யைக் கையால் தொடாமல் இருக்க வேண்டும்.
3. இலையின் மேல் இடப்பட்ட கைப்பிடி அளவு பழைய சோற்றைப் பிழிந்து நீரை விலக்கி வெள்ளெருக்குத் துவையலைத் தொட்டுக் கொண்டு சிறிதே புளியைச் சேர்த்துக் கொண்டு வெந்தும் வேகாததுமாக உண்ண வேண்டும்.
4. பரல் கற்கள் (பருக்கைக் கற்கள்) நிறைந்த கட்டாந்தரையில் பாய் இன்றிப் படுக்க வேண்டும்.
5. இப்படி ஒரு கடின வாழ்க்கையை விரும்பி வாழும், கைம்மை நோன்பு நோற்றேனும் உயிர் வாழ விரும்பும் பெண்களில் ஒருத்தி இல்லை யான்.
6. ஊருக்கு வெளியே இருக்கும் காட்டில் கருங்கட்டைகளால் உண்டான நெருப்பை உடைய இந்த ஈமப்படுக்கை உங்களுக்கு வேண்டுமானால் அரியதாகவும் கொடியதாகவும் இருக்கலாம் எனக்கு அப்படி இல்லை.
7. பெரிய தோளினை உடைய என் கணவன் மாய்ந்த பின் நன்கு மலர்ந்த அழகான தாமரை மலர்கள் நிறைந்த நீர்ப்பொய்கையும் தீயும் ஒரே தன்மை உடையன.

உடன்கட்டை ஏறும் வழக்கம் இந்தப் பாடல் எழுதப்பட்ட போது இருந்திருக்கிறது என்பது இந்தப் பாடலின் மூலம் தெரிகிறது் ஆனால் அது சான்றோர்களால் தடுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது. இந்தப் பாடலின் மூலம் விதவைகள் படும் துயரமும் சொல்லப்பட்டிருக்கிறது. கைம்மை நோன்பெனும் துயரம் பலவகைகளில் கூறப்பட்டிருக்கிறது.இந்தப் பாடலின் குறிப்பில் “பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது“ என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவள் இந்தப் பாடலைப் பாடிய பின்னர் தீப்பாய்ந்தாளா இல்லையா என்ற குறிப்பு இந்தப் பாடலில் இல்லை. ஆனால் அவள் தீப்பாய்ந்தாள் என்பதே பலருடைய கருத்தாக இருக்கிறது. பாண்டியன் மனைவி தீப்பாய்ந்தாள் என்றால் வேறு ஏதாவது புலவர் அதனைப் பாடியிருப்பார் ஆனால் அப்படிப்பட்ட குறிப்பு வேறு எந்தப் பாடலிலும் இல்லை அதனால் இவள் தீப்பாய்ந்தாள் எனக் கொள்ளத் தேவையில்லை என்றும் சிலர் கருதுகின்றனர். வேறு எந்தப் பாடலிலும் இந்தக் குறிப்பு இல்லை என்பது இந்நிகழ்ச்சி

நடைபெறவில்லை என்று காட்டுவதாக அமையாது என்பர் சிலர்.இந்தப் பாடல் மட்டுமே கைம்மைக் கொடுமையையும் உடன்கட்டை ஏறுவதையும் கூறுகிறது் அதனால் இது சிறுபான்மையாகத் தான் நடந்திருக்கும் பெரும்பான்மையாக நடந்திருந்தால் மற்ற பாடல்கள் கூறியிருக்கும். இருப்பினும் உடன்கட்டை ஏறுவது வேண்டுமானால் சிறுபான்மையாக இருந்திருக்கலாம் ஆனால் கைம்மை பெரும்பான்மையாகத் தான் இருந்தது என்பது இந்தப் பாடலின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

இதுபோல் சைவநாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசரின் வரலாற்றை உரைக்கும் பெரிய புராணத்தில் உடன்கட்டை ஏறுதலை தடுத்து நிறுத்திய நிகழ்வை அவதானிக்க முடிகின்றது. திருநாவுக்கரசரின் தகப்பனாரான புகழனார் இவரின் இளமை வயதிலேயே மரணமடைந்துவிட்டார். அப்பொழுது பதிவிரதையான மாதினியார் என்ற அவருடைய பத்தினி உடன்கட்டை ஏறினாள் என்று “பெரிய புராணம்“ கூறுகின்றது. **(சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசுநாயனார் புராணம், பா.35 – 40)**பல்லவ ராஜாவிடம் சேனாதிபதியாக இருந்த கலிப்பகையார் என்பவருக்கு திலகவதியை திருமணம் செய்து கொடுப்பதாக நிச்சயம் பண்ணியிருந்தார்கள். ஆனால் புகழனார் இறந்த அதே சமயத்தில் நல்ல வாலிபரான கலிப்பகையும் யுத்த பூமியில் வீர ஸ்வர்க்கமடைந்து விட்டார் என்ற தகவல் வந்தது. உடனே அந்தச் சின்ன பெண், ”அவருக்கென்று என்னை எப்போது பெரியோர்கள் நிச்சயம் செய்துவிட்டார்களோ அப்போது அவருக்கு நான் மனைவிதான். எனக்கு இந்த எண்ணம் வந்த பிறகு நான் இன்னொரு ஆடவனுக்கு மாலையிட மாட்டேன். அவர் போய்விட்டதால் நானும் பிராணத் தியாகம் பண்ணிவிடப் போகிறேன்” என்று அதிசயமான கற்பு வேகத்தில் புறப்பட்டு விட்டாள். பின்னர் அப்பர் மனவேதனையுடன் அவளைத் தடுத்து, ”அப்பா, அம்மா இருவரும் போனபின் நீயும் இல்லாமல் சின்னஞ் சிறுவனான நான் தன்னந்தனியாக யாது செய்வேன்? நானும் உன் பின்னே பரலோகம் வந்துவிடுகிறேன்” என்று கூறினார். இதனால் தம்பியின் நிலையுணர்ந்து தம்பியின் பராமரிப்புக்காக பரமத் தியாகமாக அவள் உயிர் வாழுவது என்ற முடிவு செய்தாள். **(சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசுநாயனார் புராணம், பா.35 – 40)**இவற்றின் மூலம் உடன்கட்டை ஏறுவது சமூகத்தில் விரும்பப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை என்பதும் கணவன் மீது அதிக அன்பு கொண்டிருந்தால் உடன் உயிர் துறந்துள்ளனர் என்பதும் இது கட்டாயமான ஒரு நியமமாக இருக்கவில்லை என்பதும் வெளிப்படுகின்றன.

**உடன்கட்டை ஏறலும் நம்பிக்கைகளும்**

உடன்கட்டை ஏறினால் உயிருடன் உள்ள பெண் எரியும் போது, அந்தப் பெண் அடையும் துன்பம் விபரிக்கவியலா. ஒரு உயிர் போகும் போது எதற்காக இன்னொரு உயிர் சேர்ந்து செல்ல வேண்டும். இறந்தவருக்கு கூட இந்த கொடூர துன்பம் உண்டாகவில்லையே? என்கின்ற வினாக்கள் உடன்கட்டை ஏறுதலை எதிர்க்கும் வகுப்பினரால் எழுப்பப்படும் வினாக்களாகும். ஆனால் உடன்கட்டை ஏறிய பெரும்பாலான பெண்கள் இதனை முழுமனதோடு விரும்பியே மேற்கொண்டுள்ளனர். “ஐயோ உயிரோடு இப்படி அக்னியில் பொசுங்குகிறாயே!“ என்று பந்துக்கள் கதறிய போது, “அக்னி பொசுக்கவேயில்லை. புருஷனை இன்பம் செய்து கொள்கின்ற ஸுகத்தோடு சாகிறேன்“ என்று சிரித்துக் கொண்டே சொன்னபடி தஹனமாயிருக்கிறார்கள். நெருங்கிய உறவுகள் மீதான பக்தி எத்தகைய அசாதாரண காரியங்களையும் முடிக்கச் செய்யும். இதற்கு சில எடுத்துக்காட்டுக்கள்:

1. ஆஞ்ஜநேயரின் வாலில் வைத்த நெருப்பு ஸீதையின் கற்புச் சக்தியால் அவரை பாதிக்காமலேயிருந்தது.
2. அநேக பதிவிரதைகளுக்கு அவர்களுடைய பதி பக்தியினாலேயே சிதாக்னி சந்தனமாக இருந்திருக்கிறது. கண்ணகி கதையில் பாண்டிய ராணி இப்படித்தான். புருஷன் “குற்றம் செய்து விட்டோமே!“ என்று பிராணத் தியாகம் பண்ணினதும், தானும் உயிரை விட்டு விட்டாள்.
3. அஷ்டபதி பாடிய ஜயதேவருடைய பத்னி பத்மாவதியைப் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று ராணி அவளிடம் ஜயதேவர் எங்கோ போன இடத்தில் மரணமடைந்து விட்டார் என்று சொன்னவுடனேயே அவளுடைய பிராணன் போய் விட்டது. இப்படி யோஜனை போதாமல் அனர்த்தம் பண்ணி விட்டோமே என்று ராணி ரொம்பப் பச்சாதாபப்பட்டபின் ஜயதேவரே கிருஷ்ண பரமாத்மாவின் அநுக்ரஹத்தால் பத்மாவதியை உயிர்ப்பித்தார்.

எனவே, உடன்கட்டை ஏறல் என்பது இந்துசமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது. ஆனால் தம் பதி மீது கொண்ட அன்பும், கைம்மை நோன்பின் (விதவையருக்கான நியம வாழ்வு) கொடுமையுமே பெண்களை உடன்கட்டை ஏறச் செய்தன. ஆனால் காலனித்துவ ஆட்சியில் ஆங்கிலேயர்கள் இவ்வழமையை பூதாகரமாக வெளிப்படுத்தியமையே ஒட்டுமொத்த இந்துசமூகத்திற்கும் இக்கெட்ட பெயர் உருவாக காரணமாக அமைந்தது.

**ஆங்கிலேயர் விஸ்வரூபமாக காட்டிய உடன்கட்டை ஏறும் வழமை**

இந்தியாவில் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் உடன்கட்டை ஏறியமைக்கான பதிவுகள் அதிகம் கிடைக்கின்றன. இருப்பினும் ஆங்கிலேயர்களால் இக்காலத்தில் இடம் பெற்ற பல்வேறுபட்ட பதிவுகளினால்தான் இத்தரவுகள் கிடைக்கின்றன. இதனால், இதற்கு முன்னரும் இவ்வழமை இருந்திருக்க முடியும். அதற்கான பல ஆதாரங்கள் உள்ளன. உடன்கட்டை ஏறுதல் தவறான நடைமுறை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், பிரிட்டிஷார் கூறியதுபோல் அது அவ்வளவு

அதிகமாகவோ நாடு முழுவதுமோ இருந்ததில்லை. அது இந்திய நாடு முழுவதும் இருப்பதாகவும், இந்து மதம் அதை நிர்பந்திப்பதாகவும் ஆயிரக்கணக்கான பெண்கள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள் என்றும் பிரிட்டிஷ் அரசு கூறியது.ஆனால் இவ்வழமை ஒரு சில இடங்களிலேயே காணப்பட்டது. இருப்பினும் சமூகத்தில் வந்து சேர்ந்த வழமையை முற்றுமுழுதாக நீக்கினால்தான் இந்த அவப்பெயர் இந்து சமூகத்திலிருந்து நீங்கும் என நினைத்து இந்த சீர்கேட்டை நீக்க ராஜராம் மோகன்ராய் எனும் சீர்திருத்தவாதி முன் வந்தார். ராஜராம் மோகன்ராயின் சீரிய முயற்சியால் 1829ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபு சதி தடை சட்டத்தைக் கொண்டு வந்தார். இதன்படி சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கம் தண்டனைக்குரியதாகும். இச்சட்டம் அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கவும் வழிவகுத்தது.உடன்கட்டை ஒழிப்பு சட்டம் அமலுக்கு வந்ததும், மத போதகர் வில்லியம் கேரி,'…கடந்த இருபது நூற்றாண்டுகளில் முதன்முறையாக, இரத்தம் கலக்காமல் கங்கை கடலைச் சென்றடைந்தது' என்று எழுதியிருக்கிறார். **(வின்சன்ட், க., 2012, வில்லியம் கேரியின் நொருங்குண்ட இதயம், ப.34)**இவ்வறிவித்தல் இந்துமதத்தில் உடன்கட்டை ஏறும் வழமை பெண்ணினத்தை அழித்து வந்த ஒரு சீர்கேடு என்று உலகுக்கு கூறுவதாக அமைந்தது. உண்மையில் இவ்வழமை மிகக்குறைந்தளவு மக்கட் கூட்டத்தினராலேயே நிகழ்த்தப்பட்டுள்ளது.

'சில விதிவிலக்குகளைத் தவிர, அனைத்து ஹிந்துக்களும் (எந்தப் படிநிலையில் இருப்பவராக இருந்தாலும்) உடன்கட்டை ஏறுவதைப் புனிதமானது என்றே எண்ணுகிறார்கள்' என்பதுதான் உடன்கட்டை ஏறுதலைத் தடுக்க அரசாணை பிறப்பித்த வில்லியம் பென்டின்க் பிரபுவின் கண்டுபிடிப்பாக இருந்தது. அதற்கான எந்த ஆதாரங்களையும் அவர் தரவில்லை. அவருடைய இந்த வார்த்தைகளை எடுத்துக்கொண்டு பார்த்தால், உடன்கட்டை ஏறுவதை உயர்வாக எண்ணும் மனோபாவம் இருந்தது என்பதுதான் தெரியவருகிறதே தவிர அதையேதான் அனைவரும் பின்பற்றினார்கள் என்று அல்ல. அப்போதைய ஆவணங்களிலும் உடன்கட்டை ஏறுதல் மிகக் குறைவாகவே நடைமுறையில் இருந்திருக்கிறது என்பதற்குப் போதுமான சான்றுகள் இருக்கின்றன.

உடன்கட்டை ஏறும் வழக்கம் சில வகுப்பினரிடையே, அதுவும் சில குடும்பங்களில் மட்டுமே இருந்திருக்கிறது. வட மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளைத் தவிர்த்து, இந்தியாவின் வேறு இடங்களில் இந்த வழக்கம் வெகு சொற்பமே. 1815-1828 இடையேயான பதின்மூன்று ஆண்டுகளில், பதிவு செய்யப்பட்ட உடன்கட்டை ஏறல்களில் 63 சதவிகிதம், கல்கத்தாவைச் சுற்றி நடந்திருக்கிறது. இதில் விநோதம் என்னவென்றால் அந்தப் பகுதி அப்போது ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்தது. 63% என்றதும் ஏதோ பெரிய அளவு என்றுதான் தோன்றும். ஆனால், 1824ல் பிரிட்டிஷார்களாலேயே தொகுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, வங்காள மாநிலத்தில் விதவைகளான 250,000 பெண்களில், சிதையில் ஏறியவர்களின் எண்ணிக்கை 600 தான். அதாவது 0.2 சதம் தான். வாரணாசி பற்றிய புள்ளிவிவரங்கள் நமக்கு இன்னும் ஆச்சரியத்தைத் தரும். 1820க்கும் 1828க்கும் இடையேயுள்ள ஒன்பது ஆண்டுகளில், 125 பேர்தான் உடன்கட்டை ஏறினார்கள். 'உடன்கட்டை ஏறுவது மதரீதியான கட்டாய வழக்கமாக இருந்திருக்கவில்லை இந்தியா முழுதிலும் அது நடைமுறையில் இருந்திருக்கவும் இல்லை' என்று வாரணாசியின் நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.**(Datta, Sati: Widow Burning in India, 1988, p.57)** இவைதான் பதிவு செய்யப்பட்டிருக்கும் உண்மைகள். ஆனால், ஹிந்துக்களின் வாழ்க்கை நெறியைப் பழிக்கவும் தங்களுடைய ஆதிக்கத்தை நியாயப்படுத்துவதற்கும் ஆங்கிலேயர்கள் இந்த வழக்கத்தைப் பெரிதுபடுத்திவிட்டார்கள்.

இங்கு இடம் பெற்ற உடன்கட்டை ஏறிய பெண்களின் எண்ணிக்கை சொற்ப அளவு என்பது மட்டுமல்லாமல் உடன்கட்டை ஏறுதல் என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட விஷயம். அதை ஆணாதிக்கம் என்று மட்டுமே பார்ப்பது மிகவும் பிழையான பார்வை. எதிரி மன்னனின் கைகளில் சிக்கி சின்னாபின்னமாவதைவிட போரில் கொல்லப்பட்டுவிட்ட கணவனுடன் சேர்ந்து தீயில் இறங்குவது மேல் என்று நினைத்த ராணிகள் உண்டு. சுமங்கலிகளுக்குக் கிடைக்காத பாக்கியமாகப் பெண்கள் பெருமிதமாக நினைத்ததுண்டு என்று கி.ராஜநாராயணன் கூறுகின்றார்.**(நேர்காணல் தகவல்: கி.ராஜநாராயணன், இணையம், 12.12.2013)**

இந்துமத மூல இலக்கியங்களில் கணவன் இறந்தவுடன் மனைவி உடன் இறக்க வேண்டும் என எவ்வித விதிகளையும் வற்புறுத்தியிருக்கவில்லை. இது ஒரு பொது விதியாக எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு இருக்கும் போது சமூகத்தினுள் நுழைந்தது முக்கிய காரணம் பெண்கள் கைம்மை நோன்பிற்கு பயந்தமையே முக்கிய காரணமாக கருதமுடிகின்றது.

**முடிவுரை**

உடன்கட்டை ஏறுதல் எனும் வார்த்தையில் இந்துக்களின் மரண நிகழ்வில் இஷ்டப்பட்டவர்கள் மட்டுந்தான் - பரம பதிவிரதைகளாக இருந்தவர்கள்தான் - கணவன் இறந்த பின் ஜீவனை வைத்துக் கொண்டு இருக்கமுடியாமல் துடித்துத் தாங்களாகப் பிரியப்பட்டு உடன் கட்டை ஏறியிருக்கிறார்கள். கணவன் இறந்த பின் நாம் உயிரை வைத்துக் கொண்டிருக்க முடியாது என்று நினைக்கும் உயர்ந்த உணர்ச்சி இன்றைக்கும் யாராவது லட்சத்தில், கோடியில் ஒரு ஸ்திரீக்கு இருக்கத்தான் செய்கிறது. அதனால்தான் எப்போதாவது வருஷத்துக்கு ஒரு தடவையாவது, எங்கேயேனும் ஒரு ஸ்திரீ

உடன்கட்டை ஏறினாள் அறிய முடிகின்றது. முடிவாக, உடன்கட்டை ஏறல் என்பது இந்துசமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது. ஆனால் தம் பதி மீது கொண்ட அன்பும், கைம்மை நோன்பின் (விதவையருக்கான நியம வாழ்வு) கொடுமையுமே பெண்களை உடன்கட்டை ஏறச் செய்தன. ஆனால் காலணித்துவ ஆட்சியில் ஆங்கிலேயர்கள் இவ்வழமையை பூதாகரமாக வெளிப்படுத்தியமையே ஒட்டுமொத்த இந்துசமூகத்திற்கும் இக்கெட்ட பெயர் உருவாக காரணமாக அமைந்தது.

**உசாத்துணைகள்**


1. ஔவை துரைசாமிப்பிள்ளை, சு., (உரை), (1998),புறநானூறு,மதியகம், சென்னை.
2. வின்சன்ட், க., (2012), வில்லியம் கேரியின் நொருங்குண்ட இதயம்
3. சுப்பிரமணியமுதலியார்,சி.கே., (1999), பெரிய புராணம், தமிழ்ச்சங்கம், கோவை
4. Atlekar,A.S., (1962), The Position of Women in Hindu Civilization, Motilal Banarasidas, NewDelhi,1962,p.112-124
5. Datta, V.N., (1988), Sati: Widow Burning in India, Manohar Publishers, New Delhi.
6. Arvind Sharma,(Rd.), (1989), Sati: Historical and Phenomenological Essays, Motoilal Banarasidas, New Delhi, 1989.
7. Sakuntala Narasimhan, (1990), Sati: A Study of Widow Burning in India, Viking, New Delhi